# எழுத்து அறிமுகம்
# பாலர் பள்ளி முதலாம் ஆண்டு
# பெரிய புத்தகம் 2
# ‘என்னால் முடியும்’

**கண்ணோட்டம்:**

பிள்ளைகள் எழுதுதலுக்கான ஆயத்தப் பயிற்சியில் ஈடுபடுவார்கள். அவர்கள் ‘ட,ட்’ என்னும் எழுத்துகளை நாப்பயிற்சியின்மூலம் பாடிப் பழகுவார்கள். அவர்கள் ‘ட,ட்’ எழுத்துகள் இருக்கும் சொற்களைப் படிப்பார்கள். பிறகு, பிள்ளைகள் ‘ட,ட்’ என்னும் எழுத்தின் வரிவடிவத்தை எழுதக் கற்றுக்கொள்வார்கள்.

**கற்றல் குறிக்கோள் 2: அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்**

1. **சிந்தனைகளை வெளிப்படையாகப் பிரதிபலித்தல், குறியீடுகளை வரைதல், எழுத்துக்களை எழுதுதல்**

- ✓ கிறுக்கல்கள் செய்யவும் எழுத்துப் போன்ற வடிவங்களை உருவாக்கவும் தடித்த பென்சில்/வண்ண எழுதுகோலைப் பயன்படுத்துதல்
- ✓ மணலில் வரைதல், விரலில் தடவப்பட்ட வண்ணங்கள் முதலியவை மூலம் எழுத்துப் போன்ற வடிவங்களை உருவாக்குதல்
- ✓ ஓர் எழுத்தின் கோடுகளை முறையாக எழுத முயலுதல்

**படிநிலைகள்**

1. ஒரு வண்ணப்பட்டத்தை வகுப்பிற்குக் கொண்டு வாருங்கள். பின்வரும் கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடுங்கள்;

    - பட்டத்தை எங்கே பார்க்கலாம்?
    - நீங்கள் பட்டம் விட்டிருக்கிறீர்களா?



பட்டம்

2. ‘ட,ட்’ என்னும் எழுத்துக்களைப் பிள்ளைகளிடம் காட்டி அவற்றை உச்சரித்துக் காட்டுங்கள். பிள்ளைகளிடம் உங்களைப் பின்தொடர்ந்து உச்சரிக்கச் சொல்லுங்கள்.



3. பிள்ளைகளிடம் 'படம், பட்டம், வட்டம், கட்டம்' ஆகிய சொற்களைக் குறிக்கும் படங்களைக் காட்டி அவற்றின் பெயர்களைச் சொல்ல ஊக்கப்படுத்துங்கள்.

4. இச்சொற்களை வெண்பலகையில் ஒட்டுங்கள். இச்சொற்களில் வரும் 'ட,ட்' என்னும் எழுத்துக்களைப் பிள்ளைகளிடம் அடையாளம் காணச் சொல்லுங்கள்.




5. பிறகு, பிள்ளைகள் இந்தப் பாடத்தில் கற்றுக் கொண்ட எழுத்துகளின் அட்டைகளை ஆளுக்கு ஒன்றாகத் தந்து, அந்த எழுத்தை வாசிக்கச் சொல்லுங்கள்.

6. பிள்ளைகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள எழுத்தைக் கொண்டு சொல் உருவாக்கச் சொல்லுங்கள்.

7. ஒருவரிடம் 'ட' என்ற எழுத்து இருந்தால், அவர் 'ப,ம்' எழுத்துக்கள் வைத்திருக்கும் பிள்ளைகளைத் தேட வேண்டும். அல்லது 'ப,ட்,ம்' என்ற எழுத்துக்கள் வைத்திருக்கும் பிள்ளைகளைக் கண்டுபிடித்துப் பட்டம் என்ற சொல்லை உருவாக்க வேண்டும்.

8. பின்னர், நீங்கள் ஆள்காட்டி விரலால் காற்றில் மேலிருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் நேர்கோடுகள் எழுதிப் பிள்ளைகளிடம் காட்டுங்கள்.



9. பிறகு, பிள்ளைகளை உங்களுடன் இணைந்து காற்றில் எழுதச் சொல்லுங்கள்.

10. ‘ட,ட்’ என்னும் எழுத்துக்களை ஆள்காட்டி விரலால் வண்ணச்சாயத்தில் தொட்டு வெள்ளைத்தாளில் எழுதச் சொல்லுங்கள்.



11. பிள்ளைகள் ‘ட,ட்’ எழுத்துக்களை எழுதும்போது அவற்றை உச்சரித்துக் கொண்டே எழுதச் சொல்லுங்கள்.

********************************

## வண்ணம் தீட்டுவேன்



## புள்ளிகளை இணைப்பேன்



